Koviloor Digital Library

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 4310
Q25

3-4

திருமகள் வாழ்த்து

ஓம்
ஸ்ரீ அருணகிரி நாதர்
இசைச் சங்கம்,
மகர்நோன்பு அக்ரஹாரம்,
காரைக்குடி.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

திருமகள்
திருக்குறுந்தாண்டகம்

✲

ரெ. முத்துக்கணேசன்

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE 436846)

✲

அழகம்மை — இராமசாமி
திருமண வெளியீடு

துந்துபி - வைகாசி - 10
24 - 5 - 1982

Koviloor Digital Library

Koviloor Digital Library

வாரியார் வழங்கும் திருமணவாழ்த்து

முகாம் : தேவகோட்டை
நாள் : 22 - 4 - 1982

நங்கை அழகம்மை
நல்ராம சாமியுடன்
இங்கிதமாய் இன்பமுடன்
எந்நாளும் — மங்களமாய்
நல்லறங்கள் செய்தோங்கி
நம்பன் திருவருளால்
இல்லறத்தில் வாழ்க இனிது!

அன்பன்
கிருபானந்தவாரி

Koviloor Digital Library

வாரியார் வழங்கும் சாற்றுக்கவி

முகாம் : தேவகோட்டை
நாள் : 22 - 4 - 1982

தண்ணூர் திருக்குறுந்
தாண்டகம் செந்தமிழால்
பண்ணூர் திருமகள்மேல்
பாடினுன் — எண்ணூர்
கலைதேர்ந்த முத்துக்
கணேசனிதைக் கற்பார்
நிலையாக வாழ்வர் நிறைந்து!

அன்பன்
கிருபானந்தவாரி

Koviloor Digital Library

திருமகள்
திருக்குறுந் தாண்டகம்

Koviloor Digital Library

1

அடர்கரு முகிலிற் செம்மை
அழகுறக் கலந்தா லன்ன,
படர்அறம் பூப்ப தேபோல்
பாம்பணி அப்பன் மார்பில்
இடர்கெட எழுந்த தாயை
ஈடிலாச் செல்வம் ஈந்து
சுடர்விடும் பவளத் தாளைத்
துயரறப் பரவு வோமே!

பெயர்–பவளவல்லி; ஊர்-பவளவண்ணம்; காஞ்சீபுரம்.

Koviloor Digital Library

முத்தினை மரக தத்தை
முழுமையை அழகுக் கெல்லாம்
வித்தினை உயிர்கள் வாழ
விளங்கிடும் அமுதந் தன்னை
அத்தனின் நெஞ்சை ஆளும்
அழகியை கமலத் தாளைப்
புத்திளங் கனியை வண்ணப்
பொலிவினைப் போற்று வோமே!

மரகதவல்லி (திருவெள்ளியங்குடி)
அமுதவல்லி (உலகளந்த பெருமாள் கோயில்)
அழகியவல்லி (அன்பில்)
கமலவல்லி (தஞ்சை மாமணிக் கோயில்)

Koviloor Digital Library

3

ஆம்பலாய்த் தாம ரையாய்
அங்கங்கே பூத்த மங்கை
கூம்பிய இதழ்தி றந்து
குளிர்தரு மணமே ஆவாள்;
பூம்பிணைக் கண்ண ளேடு
பொற்கொடி நாச்சி நாமம்
தேம்பியே உரைப்பார் அல்லால்
தீவினை அகன்றார் யாரே?

தாமரையாள் (திருவாரன் விளை)
பொற்கொடி நாச்சியார் (திருப்புலியூர்)

Koviloor Digital Library

உய்யவோர் பற்றுக் கோடாய்
உயிரினுக் குயிரே ஆவாள்;
தெய்வமா மறைகள் காணுத்
தேவியைத் திருவிளக்கை,
மையலே அணுகா வண்ணம்
மனத்தினை நிறைகொள் வாளைச்
செய்யசீர் மேனி யாளைத்
திருவினைச் சிந்திப் போமே!

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE : 436846)

பெருந்தேவி (அத்தியூர்; காஞ்சி)

Koviloor Digital Library

5

அரும்பிய ஆசை மூன்றை
அனலுறு மெழுக தாக்கும்;
இரும்பன அகந்தைப் பேய்கள்
இயல்பினைச் சாடிப் போக்கும்;
அரும்படை வீரம் ஆவாள்;
அன்னையை ஆதி யாளைக்
கரும்பினை நினைவார் வாழ்வில்
காப்பினைக் காணு வாரே!

ஆதிநாதவல்லி (திருக்குருகூர்; ஆழ்வார் திருநகரி)

Koviloor Digital Library

6

பாயுநீர் அருவி போலப்
பல்கலை செழிக்கத் தோன்றி
ஆயுநர் உள்ளம் தோறும்
அகத்தினில் காட்சி நல்கும்
மாயனார் நெஞ்சத் தானை
மட்டவிழ் குழலி னாளைச்
சேயனேன் புகழப் போமோ?
செப்பநா வலிவி லேனே!

மட்டவிழ் குழலி-
(காழிச்சீராம விண்ணகரம்: தாடாளன் சந்நிதி)

Koviloor Digital Library

7

துன்பினைக் காட்டி, மக்கள்
தொல்வினை துடைத்து, ஞான
இன்பினைப் பெய்வாள்; வாழ்வை
இயக்கிடும் விதியை நெய்யும்
அன்பினைச் செண்பகத்தை
அல்லிமா மங்கை தன்னைப்
பொன்னியைப் பணியும் தொண்டர்
புகழினை ஆள்வர் தாமே!

செண்பகவல்லி (நந்திபுர விண்ணகரம்; நாதன்கோயில்)
அல்லிமா மலர் நாச்சியார் (செம்பொன்செய் கோயில்)

Koviloor Digital Library

மருவளர் துளவம் போற்ற
　　மார்பினில் அணிந்து காத்தாள்;
உருளுறு நேமி சங்கம்
　　உய்யவே ஆத ரித்தாள்;
உருவினில் உருகு வாரை
　　உகந்திடும் ஆண்டாள் தன்னை
கருணையைச் சுந்தரத்தைக்
　　கழறுவார்க் கினிய வாறே!

ஆண்டாள் (திருவில்லிப்புத்தூர்)
சுந்தரவல்லி (அழகர் கோயில்)

Koviloor Digital Library

பழுதிலா இசையை மாந்திப்
பற்பல ஓசை கேட்டாள்;
விழுதிடை வாழும் புள்ளின்
வியத்தகு ஒலியும் ஏற்ருள்;
பழுதுறும் பொருளாம் என்சொற்
பாமலர் அணிந்தாள்; செல்வக்
கொழுந்துதன் எளிமை என்னே!
குணக்கடல் சிக்கி னேனே!

செல்வத் திருக் கொழுந்து-
(திருவல்லம் வாழ்; திருவல்லம்)

Koviloor Digital Library

தன்பெரும் நிதியை ஈந்தாள்;
தாங்கொணு வறுமை என்னும்
என்பெரும் உடைமை ஏற்ற
கருணைக்கோர் ஈடு முண்டோ?
என்பெலாம் இனிக்கத் தோன்றும்
எழிலியைக் கற்பகத்தை
அன்பினுல் வழுத்த வல்லார்
அருளினை அடைவர் தாமே!

கற்பகவல்லி (திருக்கடித்தானம்)

Koviloor Digital Library
KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: 436846)

தருவினை அடைய வேண்டின்
　　தரணியில் வெற்றி வேண்டின்
பெருவினை அகல வேண்டின்
　　பெரும்புகழ் சூட வேண்டின்
திருவொடு சுற்றம் மக்கள்
　　தெளிவுறு ஞானம் வேண்டின்
திருமகள் தாளை நோற்போம்
　　திருவருள் எய்தி வாழ்வோம்!

பூவார் திருமகள்-
(திருவெள்ளக் குளம்; அண்ணன் கோயில்)

Koviloor Digital Library

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 4310

Koviloor Digital Library

தி சௌத் இந்தியா பிரஸ் காரைக்குடி போன் 300